செ.வெ.எண்-12 நாள்-09.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

## ‘உழவன் கைபேசி செயல்’

வேளாண் விரிவாக்கத்தில் மின்னணு பரிணாமமாக விளங்கும் **“உழவன் கைபேசி செயலி”** 05.04.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. விவசாயிகள் இச்செயலினை தங்களது ஆண்ட்ராய்டு கைபேசியில் கூகுள் பிளேஸ்டோரில் பதவிறக்கம் செய்து கொண்டு பயன்பெறலாம்.

இச்செயலி **ஒன்பது** முக்கிய சேவைகளை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கொண்டுள்ளது.

தமிழக அரசின் வேளாண்மை துறை திட்டங்கள், மானிய விவரங்கள் இனம் வாரியாக விவசாயிகள் அறிந்து கொள்ளலாம். பயனாளி திட்டம் முன்பதிவு மூலம் வேளாண்மை சார்ந்த திட்டங்களை மானியத்தில் பெறுவதற்கு முன்பதிவு செய்து கொள்ளலாம். பயிர் காப்பீடு விபரம் அறிதல் - பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீடு செய்தது முதல் இழப்பீடு பெறும் வரை உள்ள நிலையினை அறிய தங்களது பதிவு செய்த கைப்பேசி எண் அல்லது நிலபுல (Survey) எண்ணை பயன்படுத்தி தெரிந்து கொள்ளலாம். உரம் இருப்பு விபரம் அறிய கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடைகளில் உள்ள முக்கிய உரங்களின் இருப்பு விபரங்களை நிகழ்நிலை முறையில் தெரிந்து கொள்ளலாம். விதை இருப்பு விபரம் அறிதல் - விவசாயிகள் தங்கள் வட்டாரத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் கடைகளில் உள்ள விதை இருப்பினை தெரிந்து கொள்ளலாம். வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் - விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு பயன்படுத்தி கொள்ள அரசு மற்றும் தனியார் நிலையங்களை இச்செயலி மூலம் பயன்படுத்தி கொள்ளலாம். விவசாயிகள் தமிழகம் முழுவதும் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் அன்றைய தேதியில் ஏலத்தில் விற்பனையான வேளாண் விளைபொருட்களின் விலையினை அறிந்து கொள்ளலாம். வானிலை அடிப்படையில் வேளாண் அறிவுரை பெறுதல் - அடுத்த நான்கு நாட்களுக்கு தங்களது பகுதியில் வானிலையை அடிப்படையாக கொண்டு தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிர் சாகுபடி முறை குறித்து தெரிந்து கொள்ளலாம். வேளாண் விரிவாக்க பணியாளர்கள் வருகை, கிராம அளவிலான வேளாண் விரிவாக்க பணியாளர்களது நிரந்தர பயணத்திட்டத்தில் சம்மந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர் பெயர், கைபேசி எண், அலுவலரின் அடுத்த கிராம வருகை, இடம் மற்றும் தேதியினை இச்செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் தங்களது ஆண்ட்ராய்டு கைப்பேசியில் **“உழவன் கைப்பேசி செயலி”** பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**